



We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## ஜுன்- 2019

*We Are Here..!! To Guide You..!!*






# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜூன் - 11.06.2019


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்











## தமிழக நிகழ்வுகள்

- தில்லியில் இருந்தபடியே தமிழ்நாட்டுக்கான மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் அனுமதி, நிதி போன்றவற்றை பெறுவதற்கு புதிய அதிகாரியை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. **சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை துணைச்செயலாளர் சு. ராதாகிருஷ்ணன் பொறுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.** இவர், மத்திய அரசின் அனைத்து முக்கியமான திட்டங்கள், திட்டப்பரிந்துரைகள், நிலுவையிலுள்ள திட்டங்கள் போன்றவற்றைக் கவனித்து, துறை அதிகாரிகளுக்கு உதவி செய்வார்.

## தேசிய நிகழ்வுகள்

We Shine Academy™

- **மத்தியப்பிரதேச அரசு இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை 14 சதவீதத்திலிருந்து 27 சதவீதமாக உயர்த்தியுள்ளது.** இதற்கான தீர்மானம், அமைச்சரவை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் அமல்படுத்தப்படால் இந்தியாவில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு வழங்கிய முதல் மாநிலமாக மத்தியப்பிரதேசம் மாறும்.

- **ஹரியானாவில் வாழும் மனிதர்களைப் போன்று அங்கு வாழும் அனைத்து விலங்குகளும் சட்டப்பூர்வ உரிமைகள் பெற்ற சட்டமுறை நபர்கள் என சமீபத்தில் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.** விலங்குகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக உத்தரகாண்ட் உயர்நீதிமன்றம் இதுபோன்ற தீர்ப்பை வழங்கி கிட்டத்தட்ட ஓராண்டுக்குப் பிறகு இந்தப் தீர்ப்பு வந்துள்ளது.
    - உத்தரகாண்டிலிருந்து சண்டிகரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா நீதிமன்றத்திலிருந்து 2018 ஆம் ஆண்டில் பணிமாறுதல் பெற்ற நீதிபதி சர்மாவால், இவ்விரு தீர்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளது

- 2019 ஆம் ஆண்டு ஜீன் 8 ஆம் தேதி **குஜராத் முதலமைச்சர் விஜய் ரூபனி மகோசாகர் மாவட்டத்தின் பாலசினூரில் உள்ள ரெயியோலி கிராமத்தில் புதிய டைனோசர் அருங்காட்சியகம் மற்றும் பூங்காவை திறந்து வைத்தார்.**

- இது நாட்டின் முதல் டைனோசர் பூங்காவாகவும் **உலகின் மூன்றாவது டைனோசர் பூங்காவாகவும் திகழ்கிறது.**

## சர்வதேச நிகழ்வுகள்

- **இந்திய விமானப்படை 100ற்கும் மேற்பட்ட ஸ்பைஸ் (SPICE) குண்டுகளை வாங்குவதற்காக இஸ்ரேல் அரசாங்கத்துடன் ரூ 300 கோடி மதிப்பிலான ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.**
    - ஸ்பைஸ் என்பது திறன் வாய்ந்த துல்லியமான தாக்கம் கொண்ட செலவு குறைந்த குண்டு என்பதன் விரிவாக்கம் ஆகும்.
    - **SPICE: Smart, Precise Impact and Cost- Effective**
    - இதன் **வரம்பு 60 கிலோ மீட்டர்** ஆகும்
    - இது வானிலிருந்து நிலத்தை நோக்கிப் பாயும் நடவடிக்கையில் பயன்படுத்தப்படும் ஆயுதங்களில் பொருத்தப்பட்டுள்ளது.

- வர்த்தகம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் மீதான G- 20 அமைச்சரவை மட்டத்திலான சந்திப்பு ஜப்பானிய நகரான ஃப்யூகூவோகாவில் (Fukuoka) நடத்தப்பட்டது.
    - **G- 20 ல் முதலாவது சுழல் முறையிலான தலைவர் பதவியை ஜப்பான் ஏற்றது.**
    - G- 20 ன் தற்போதைய தலைவர் சின்கோ அபே ஆவார்.
    - இந்தச் சந்திப்பின் போது டிஜிட்டல் மயமாக்கத்தின் முக்கியத்துவம் குறித்தும், அனைவரையும் உள்ளடக்கிய புத்தாக்கத் தன்மை மற்றும் மனிதனை மையமாகக் கொண்ட எதிர்கால சமுதாயமான சமூகம் 5.0 ஆகியவற்றை அடைய அது எவ்வாறு உதவும் என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.
    - G- 20 (20 நாடுகள் கொண்ட ஒரு குழு) என்பது 19 நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றைச் சேர்ந்த அரசாங்கங்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களுக்கான ஒரு சர்வதேச மன்றமாகும்.
    - இது 1999 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

- 2019 ஆம் ஆண்டு ஜீன் 06 முதல் முதல் ஜீன் 08 வரை அர்ஜென்டினாவின் பியூனஸ் அயர்ஸில் 2-வது உலக மாற்றுத் திறனாளிகள் சந்திப்பு (Global Disability Summit) நடத்தப்பட்டது.
    - இந்தியாவின் சார்பாக மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை அமைச்சரான தல்வார்சந்த் கெலாட் தலைமையிலான குழு பங்கேற்றிருக்கின்றது
    - இந்தச் சந்திப் மாற்றுத் திறனாளி நபர்கள் சுதந்திரமான மற்றும் கௌரவமான வாழ்க்கையை வாழ்வதற்கக வழிமுறையை உருவாக்க முயற்சிக்கின்றது.

- **முதன்முறையாக சன்டோங் மாகாணத்தின் மஞ்சள் கடலில் நகரக்கூடிய ஏவு தளத்திலிருந்து “லாங் மார்ச் 11” என்ற ஒரு ஏவு வாகனத்தை சீனா ஏவியுள்ளது.**
    - ஒரு மிதக்கும் தளத்திலிருந்து சுற்றுவட்டப் பாதைக்கு செயற்கைக் கோள்களை செலுத்தும் திறனை இதுவரை அமெரிக்கா மற்றும் இரஷ்யா ஆகிய நாடுகள் வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளன.

We Shine Academy TM